**Starting time 12.18 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.32/2015**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 05.01.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> தாவா சொத்தின் புல எண். என்னவென்றால், 177/2. அதனை எத்தனை உட்பிரிவுகள் செய்துள்ளார் என்றால், A, B, C என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. புல எண். 177/2A யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், எனக்கு பாத்தியப்பட்டது. புல எண். 177/2B யாருக்கு என்னவாக பாத்தியப்பட்டது என்றால், முத்துசாமிக்கு பாதையாக பாத்தியப்பட்டுள்ளது. 2B ல் உள்ள சொத்து தாவா சொத்திற்கு தென்புறத்தில் கிழமேல் வண்டிப்பாதையாக உள்ளது என்றால், ஆமாம்.

2. முத்துசாமியின் தகப்பனார் சின்னாகவுண்டர் அந்த நிலத்தை 03.09.1971-ல் அந்த நிலத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம். புல எண். 177/2-ல் 8 செண்ட் நிலத்தை சின்னாகவுண்டர் கிரயம் பெற்றுள்ளார் என்றாலும், அதுதான் தற்போது 177/2B ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த 8 செண்டுக்கும் செக்குபந்தி போட்டுதான் கிரயம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம். அதன் செக்குபந்தி விவரமானது ஓடைக்கும் மேற்கு, முத்துசாமி நிலத்திற்கும் வடக்கு, கருப்பண்ண கவுண்டர் நிலத்துக்கும் தெற்கு, சின்னாகவுண்டர் நிலத்துக்கும் கிழக்கு என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

3. அதே கருப்பண்ண கவுண்டர் தான் ராமசாமி கவுண்டருக்கு வா.சா.ஆ.1-ல் உள்ள சொத்தை விற்றுள்ளார் என்றால், ஆமாம். புல எண். 177/2-ல் 3 ஏக். 89 செண்டில் 2 ஏக். 81 செண்ட் நிலத்தை எனது தாத்தா கிரயம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம். அந்த 2 ஏக்.81 செண்ட் நிலத்திற்கும் 4 எல்லைகள் குறிப்பிட்டுதான் கிரயம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம். சின்னாகவுண்டருக்கு நான் தடத்திற்காக கிரயம் செய்திருக்கும் நிலத்திற்கு வடக்கு, சின்னாகவுண்டர் நிலத்துக்கும், வேலாயி நிலத்திற்கும் கிழக்கு, வேலாயி நிலத்திற்கும் தெற்கு, மலைக்கு போகும் வண்டிப்பாதைக்கும் மேற்கு இதன் மத்தியில் 2 ஏக். 81 செண்ட நிலத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம்.

4. நான் வழக்கில் கிழமேல் 9 அடி அகலத்திலும் தென்வடல் 75.6 மீ நீளத்திலும் வண்டிப்பாதையும் சேர்த்து கிரயம் பெற்றதாக குறிப்டிபிட்டுள்ளேன் என்றால், ஆமாம். ஆனால் கிரயப்பத்திரத்தில் அவ்வாறு இல்லை என்று குறிப்பிடவில்லை என்றால், ஆமாம். மலைக்கு போகும் வண்டிப்பாதைக்கும் மேற்கு என்று தான் 2 ஏக்.81 செண்ட் என்று செக்குபந்தி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அந்த வண்டிப்பாதை புல எண் 177/2A-ல் செல்வதாக நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம்.

5. தாவா வண்டிப்பாதையானது கெங்கவல்லி தம்மம்பட்டி மெயின் ரோட்டிலிருந்து கவுண்டம்பாளையம் கிழங்கு மில் அருகில் வடக்கு நோக்கி மலை வரையிலும் செல்கிறது என்றால், ஆமாம். அது ஆரம்பத்தில் ஓடையாகத்தான் இருந்தது என்றால், ஆவணத்தில் புல எண். 177/2 வரையிலும் ஓடையாகத்தான் அது காட்டப்பட்டுள்ளது. அந்த தென்வடல் பாதையானது மலை வரையிலுமே ஓடையாகத்தான் இருந்து வந்தது என்றால், சரிதான். அதனால்தான் சின்னா கவுண்டர் கிரயப்பத்திரத்தில் 8 செண்ட் நிலத்திற்கு கிழக்குபுறத்தில் ஓடையாக காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

6. என் தாத்தா கிரயம் பெறுவதற்கு முன்பாகவே தென்வடல் ஓடையானது சென்று

கொண்டிருந்தது என்றால், ஆமாம். மலை வரையிலும் குடியிருப்பவர்கள் அந்த ஓடையை பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால், ஆமாம். சுமார் 8 குடும்பங்கள் பயன்படுத்தி வருகிறார்கள். யார் யார் அந்த பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்று நான் எனது தாவாவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், ஆமாம். அறுவடை காலங்களில் அந்த மலை வரையிலும் குடியிருப்பவர்கள் வண்டி வாகனங்கள் மூலம் அறுவடை பொருட்களை எடுத்து செல்வது வழக்கம் என்றால், இதற்கு முன்பு டிராக்டரில் தான் எடுத்துச் சென்றார்கள். என்னுடைய நிலத்தை இடித்து நிரவிய பிறகுதான் லாா மூலம் எடுத்துக் செல்கிறார்கள்.

7. என்னுடைய நிலத்திற்கு வடபுறம் மலை வரை செல்லும் பாதை வருவாய் ஆவணங்களில் 177/1 என அரசு தரிசாக உள்ளது என்றால், சரிதான். தென்புறத்திலும் வடபுறத்திலும் 6 மீ அகலத்தில் உள்ளதாக வா.சா.ஆ.8-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். என் தாத்தா கிரயம் பெற்ற புல எண். 177/2A-ல் வடகிழக்கு மூலையில் கிணறு உள்ளது என்றால், சரிதான். அந்த கிணற்றுக்கு கிழபுறத்தில் கிணற்று மண் கொட்டப்பட்டுள்ளது என்றால், இல்லை, தென்புறத்தில் தான் கொட்டப்பட்டுள்ளது.

8. தென்வடல் வண்டிப்பாதைக்கு மேற்கில் அதன் அத்தில் என்னுடைய நிலம் வரையிலும் நான் தென்னை மரங்கள் வைத்துள்ளேன் என்றால், இல்லை, என்னுடைய வயலில் தான் வைத்துள்ளேன். வண்டிப்பாதைக்கு மேற்கில் என்னுடைய வயலில்தான் தென்னை மரங்கள் உள்ளது என்றால், ஆமாம். என்னுடைய நிலத்திற்கு வடபுறத்தில் இருப்பவர்களும் பாதையை ஒட்டி மேற்கு புறத்தில் தென்னை மரங்கள் வைத்துள்ளார்கள் என்றால், அவர்களுடைய வயலில் வைத்துள்ளார்கள்.

9. அந்த மரங்கள் அனைத்தும் தென்வடல் வண்டிப்பாதையை ஒட்டினாற்போல் அமைந்துள்ளது என்றால், இல்லை, சற்று தள்ளிதான் அமைந்துள்ளது. அந்த தென்னை மரங்கள் வைத்து 30, 35 வருடங்கள் இருக்குமா என்றால், 20 வருடங்கள் இருக்கும். பிரதிவாதிகள் 20 வருடங்களாக ரிக் வண்டி வைத்து தொழில் செய்து வருகிறார்கள்

என்றால், ஆமாம். அந்த பாதைக்கு கிழபுறத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நிலம் இருக்கிறது என்றால், ஆமாம்.

10. பிரதிவாதிகள் வண்டிப்பாதைக்கு கிழபுறத்தில் அவர்களது நிலத்திற்கு மேற்புறத்தில் கருங்கல் மூலம் கல்கட்டு கட்டியுள்ளார்கள் என்றால், ஆமாம். அந்த கருங்கல் கட்டானது கெங்கவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. அவர்களாகவே தான் கட்டிக் கொண்டார்கள். நான் கூறுவது தவறு என்றாலும், கெங்கவவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர் தான் கல்கட்டு கட்டிக் கொடுத்தார் என்றாலும், சரியல்ல.

11. பிரதிவாதிகள் கல்கட்டு கட்டியபோது நான் கேட்டேன் அதற்கு அவர்கள் தற்போது கட்டிக் கொள்வதாகவும், மீண்டும் அளக்கும் போது அதிகமாக இருந்தால் பிரித்துக் கொள்வதாகவும் என்னிடம் கூறினார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அந்த கல்கட்டு கட்டி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால், ஞாபகம் இல்லை, சுமார் 20 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

12. என்னுடைய நிலத்தில் உள்ள கிணற்றுக்கு கிழபுறத்திலும், தென்புறத்திலும் இருந்த கிணற்று மேட்டில் செடிகள் முளைத்து போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததால் அந்த பாதையை பயன்படுத்துபவர்கள் அதைதான் அப்புறப்படுத்தினார்கள் என்றால், சரியல்ல. 5 டிப்பர் லாரி மண்ணை இடித்து அகற்றி எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். மேற்படி சங்கதிகளை என்னுடைய வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளேன்.

13. வழக்கு போட்ட பிறகு நீதிமன்ற ஆணையர் வழக்கிடத்தை பார்வையிட்டாரா என்றால், பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் 24 அடி, 22 அடி மற்றும் 15 அடி அகலம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால், ஆமாம். தாவா பாதைக்கு மேற்கு புறத்தில் 2 வேப்ப மரங்கள் சுமார் 3 வயது பிடுங்கப்பட்டு

கிடந்ததாகவும், தாவா பாதைக்கு மேற்கு புறத்தில் மண், செடி, கொடிகள் எடுக்கப்பட்டு பாதையில் புகைப்படத்தில் கண்டுள்ளவாறு இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

14. நீதிமன்ற ஆணையரை நான்தான் மனு தாக்கல் செய்து அழைத்து சென்று காட்டினேன் என்றால், ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் என்ன தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால், சரியல்ல, தெரியாது. நான் எனது வழக்கறிஞதை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. அதற்கு நான் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால், ஆமாம். நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் 24, 23,22 அடி அகலத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால், ஆமாம். அதன் பிறகு தாவாபாதை புதியதாக மண் கொட்டப்படாத இடத்தில் 15 அடி, 16 அடி அகலத்தில் இருப்பதாக கூறியுள்ளார் என்றால், சரிதான். பிரதிவாதிகள் நிலம் வாங்கியதிலிருந்தே தாவா பாதையில் வண்டி வாகனங்களில் சென்று வருகிறார்கள் என்றால், ஆமாம்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 01.02 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.